Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 037 · வியாழக்கிழமை Thursday · 07.05.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# தமிழக ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய்



சென்னை: தமிழக ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை ஆளுநர் மாளிகையில் சந்தித்து, தவெக தலைவர் விஜய் ஆட்சி அமைக்கஉரிமைகோரினார். தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தவெக தலைவர் விஜய், ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை பிற்பகல் 3.30 மணி அளவில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அவருடன் செங்கோட்டையன், ஆனந்த்,ஆதவ்அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்டோர் உடன் சென்றிருந்தனர். விஜய்யை வரவேற்ற ஆளுநர் அர்லேகர், அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இதையடுத்து, விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

பதவியேற்பு விழாவை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் காலை 11.30 மணி அளவில் பிரம் மாண்டமாக நடத்த ஏற் பா டுகள் நடந்து வருகின்றன. முதல்வராகவிஜய் பதவி யேற்பார் என்று கூறப் படுகிறது.

அவருடன் அமைச்சர் களும் பதவி யேற்க உள் ளனர். அ மைச்சரவை யில் செங்கோட்டையன், ஜேசிடி. பி ர பாகர், ஆனந்த் , ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல்குமார் , மரிய வில் சன், ராஜ்மோ கன் , அருண் ராஜ், சத்தியபாமா, விஜயலட்சுமி, ஸ்ரீநாத் உள்ளிட் டோர் இ டம்பெற வாய்ப்புஉள்ளதாககூறப் படுகிறது.நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமை யிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொ குதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 உறுப்பினர்களின்ஆதரவுதேவை எனும் நிலையில், காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகளின் ஆதரவை விஜய் கோரி இருந்தார். காங்கிரஸ் கட்சி 5 தொகுதிகளிலும், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகியவை தலா 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளதால், இக்கட்சிகள் இணைந்தால் பெரும்பான்மையை எளிதில் பெற முடியும்.

விஜய்யின் கோரிக்கையை ஏற்று, தவெகவுக்கு ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி இன்று அறிவித்தது. இது தொடர்பாக அக்கட்சியின் தமிழக பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவை வழங்குமாறு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு தவெக தலைவர் விஜய் முறைப்படி கோரிக்கை விடுத்திருந்தார். இதை ஏற்று, தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்கு முழு ஆதரவை வழங்க காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. எந்தவொரு வகுப்புவாத சக்தியையும் இந்தக் கூட்டணியில் சேர்க்காமல் தமிழக வெற்றி கழகம் விலக்கி வைப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆதரவு வழங்கப்படுகிறது.

இரு கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை, அவரவர்க்கு உரிய பங்கு, கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்தக் கூட்டணி, தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதற்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகள், மக்களவை மற்றும் மாநிலங்களவை தேர்தல்களிலும் தொடரும்" என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை,தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராஜேஷ் குமார், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர்விஜய்யை பனையூர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகள் தவெக கூட்டணியில் இணைவது குறித்து தங்கள் கட்சியினருடன் ஆலோசித்து தெரிவிப்பதாக கூறியுள்ளனர். அதிமுக தரப்பிலும், விஜய்க்கு ஆதரவு அளிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

# தவெக ஆட்சி அமைக்க காங்கிரஸ் நிபந்தனையுடன் ஆதரவு



சென்னை: தவெக ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மதவாத சக்திகளுக்கு ஆதரவாக செயல்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் ஆதரவு அளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால்தமிழகத்தில்திமுக உடனான காங்கிரஸ் கூட்டணி முடிவுக்கு வந்துள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது.அக்கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. எனினும், இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள விஜய்,அதில் ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, தவெகவின் பலம் 107 ஆக குறையும்.

சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், தவெகவுக்கு கூடுதலாக 11 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. தற்போது காங்கிரஸ் தரப்பிலிருந்து 5 எம்எல்ஏக்கள் ஆதரவு கிடைத்துள்ள நிலையில், இன்னும் 6 எம்எல்ஏக்கள் தேவைப்படுகின்றனர். இந்தச் சூழலில் அடுத்த ஆதரவு விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகளா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

அதேபோல் தேசிய அளவில் இண்டியா கூட்டணியில் காங்கிரஸ், திமுக இருக்கும் நிலையில்,அடுத்துவரும் உள்ளாட்சி தொடங்கி மக்களவைத் தேர்தல் வரை தவெக உடனான கூட்டணி தொடரும் என்று காங்கிரஸ் அறிவித்துள்ளதால் இண்டியா கூட்டணியில் அடுத்து என்ன நடக்கும் என்பது குறித்து விவாதங்கள் எழுந்துள்ளன.

காங்கிரஸ் அறிக்கை சொல்வது என்ன?

தமிழ்நாடு காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவை வழங்குமாறு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு தவெக தலைவர் விஜய் முறைப்படி கோரிக்கை விடுத்திருந்தார்.

அரசியலமைப்பு கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்ட, மதச்சார்பற்ற, முற்போக்கான, மக்கள் நலன் சார்ந்த அரசாங்கத்தை அமைப்பதற்கான மிகத் தெளிவான, வலுவான, மகத்தான தீர்ப்பை தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக இளைஞர்கள் வழங்கியுள்ளனர். அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்கு விஜய் தலைமையில் இயங்கும் தமிழக வெற்றி கழகத்தையே அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, இந்தியாவில் மதச்சார்பற்ற, முற்போக்கான, மக்கள் நலன் சார்ந்த அரசியலின் அடித்தளமாகத் திகழ்வதுடன், அத்தகைய அரசியலுக்காகவே உறுதியாக நிற்கிறது. தமிழ்நாட்டு மக்கள் வழங்கிய இந்தத் தேர்தல் ஆணையை மதிப்பதும், அதனை நிலைநிறுத்துவதும், அதனைச் செயல்படுத்த உதவுவதும் நமது அரசியலமைப்பு கடமையாகும்.

அதற்கிணங்க, தமிழக காங்கிரஸ் கமிட்டியும், காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியும், தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்குத் தங்களது முழு ஆதரவை வழங்க முடிவெடுத்துள்ளன. இந்திய அரசியலமைப்பின் மீது நம்பிக்கை இல்லாத எந்தவொருவகுப்புவாதசக்தியையும் இந்தக் கூட்டணியில் சேர்க்காமல் தமிழக வெற்றி கழகம் விலக்கி வைப்பதை அடிப்படையாகக் கொண்டே எங்களது ஆதரவு வழங்கப்படும்.

தமிழக வெற்றி கழகத்திற்கும் தமிழக காங்கிரஸுக்கும் இடையிலான இந்தக் கூட்டணி, வரும் பல பத்தாண்டுகளுக்கு தந்தை பெரியாரின் சமூக நீதி கொள்கைகள், பி. ஆர். அம்பேத்கரின் அரசியலமைப்பு கொள்கைகள் மீது உறுதியான பற்றுறுதியுடன்செயல்பட்டு, பெருந்தலைவர் காமராஜரின் பொற்காலத்தை தமிழ்நாட்டில் மீண்டும் கொண்டுவரப் பாடுபடும்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை, உரிய பங்களிப்பு மற்றும் பகிரப்பட்ட பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்தக் கூட்டணி, தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதற்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகள், மக்களவை மற்றும் மாநிலங்களவை தேர்தல்களுக்கும் பொருந்தும்.

ஒரு மதச்சார்பற்ற மற்றும் முற்போக்கான அரசாங்கத்தை அமைப்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் வழங்கிய இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை மதித்து நடப்போம் என்றும்,

தமிழ்நாட்டு மக்களின், குறிப்பாக இளைஞர்களின் கனவுகளையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவோம் என்றும் விஜய் மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் கூட்டாக உறுதியளிக்கின்றனர்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**வரி விளம்பரங்கள்**




தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.1840 உயர்வு

(மே.6) தங்கம் விலை பவுனுக்கு ரூ.1840 உயர்ந்துள்ளது. அதேபோல் வெள்ளியின் விலையும் உயர்ந்துள்ளது.



பாதுகாப்பான முதலீடுகளில் ஒன்றாகபார்க்கப்படுகிறது தங்கம். மேலும்,இந்தியர்களின் முக்கிய சேமிப்புகளில் ஒன்றாகவும் இருக்கிறது. அரிய உலோகங்களில் ஒன்றான தங்கத்தின் மதிப்பானது, உலக சந்தையில் நாளுக்கு நாள் முக்கியத்துவம் பெற்று வருகிறது. முதலீடு என்றாலே பங்குச்சந்தை தான் என்ற நிலையானது கடந்த 2 ஆண்டுகளில் தலைகீழாக மாறியிருக்கிறது.

ஏனெனில் பங்குச்சந்தைகள் அடி வாங்கும்போது முதலீட்டாளர்கள் உடனடியாக தங்கத்தின் மீது முதலீடுகளை திருப்பி விடுகின்றனர்.இதனால் தங்கத்தின் மதிப்பு விறுவிறுவென உயர்ந்துகொண்டே போகிறது. உலகளாவிய பண வீக்கம் மற்றும் டாலர் மதிப்பின் நிச்சயமற்றதன்மை காரணமாக உலக நாடுகளின் மத்திய வங்கிகள் தங்கள் சேமிப்பை தங்கத்தின் மீது முதலீடு செய்து வருகின்றனர். இதுவே தங்கம் விலை ஏறுவதற்கு முக்கிய காரணம் என்கின்றனர் நிபுணர்கள்.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அந்தவகையில், தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. சென்னையில் நேற்று தங்கம் விலையானது கிராமுக்கு ரூ.180 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,820–க்கும், பவுனுக்கு ரூ.1440 குறைந்து ஒரு பவுன் ரூ.1,10,560–க்கு விற்பனையானது.

இந்நிலையில் தங்கம் விலையானது இன்று அதிரடியாக உயர்ந்து உள்ளது. அதன்படி, சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.230 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,050–க்கும், பவுனுக்கு ரூ.1840 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,12,400– க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை நிலவரம்:

சென்னையில் நேற்று ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கு விற்பனை யான நிலையில் கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.270–க்கு விற்பனையாகிறது. கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,70,000க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



பாண்டிச்சேரி முதலமைச்சராக என்.ரங்கசாமி தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஸ்ரீ யோக சித்தர் வாழ்த்து தெரிவித்தார்.



திருப்பூர் கிழக்கு மாவட்ட தமிழக வெற்றி கழக வெற்றியை திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் மற்றும் ஷேக் பரித் அவர்கள் அறிவுத்தின்படி தாராபுரம் வடக்கு நகர செயலாளர் மனோஜ் ஆலோசனைப்படி வடக்கு நகர இணை செயலாளர் ரஜினிகுமார் தலைமையில 8 வது வார்டு 9 வது வார்டு நிர்வாகிகள் ஐயப்பன் ராஜசேகர் ஜெகநாதன் முகிலன் பிரபாகரன் மாதேஷ் தினேஸ் ஆகியோர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி தமிழக வெற்றி கழக மாபெரும் வெற்றியை பொதுமக்களோடு கொண்டாடினர்

### நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில்

## தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகளில் வாக்காளர்களுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கீதாஜீவன் நன்றி தெரிவித்துள்ளார்



நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகளில் வெற்றி தேடித்தந்த வாக்காளர்களுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கீதாஜீவன் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் "நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் கழக வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் திமுக நிர்வாகிகள், செயல்வீரர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், செயல்வீரர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் திமுகவெற்றி வாய்ப்பை இழந்திருந்தாலும், உதயசூரியனுக்கு வாக்களித்த 62,805 வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கழகத் தலைவர் வழியில், அரசியல் பொதுவாழ்வில் கொள்கை காக்கும் பயணத்தில் நமது கொள்கை என்றும் தோல்வியடையாது. வெற்றி - தோல்வி எதுவானாலும் சமமாகக் கருதி நமது லட்சியப்பயணத்தை தொடருவோம். மக்களுக்காகதொடர்ந்து மக்கள் பணியாற்றுவோம்.

மேலும் இந்த சட்டமன்றத் தேர்தலில் தங்கள் அர்ப்பணிப்பான உழைப்பைத் தந்த தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்! என்று தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடியில் ம.தி.மு.க.வின் 33வது ஆண்டு தொடக்க விழா கட்சியினர் உற்சாகக் கொண்டாட்டம்



தூத்துக்குடியில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 33-வது ஆண்டு தொடக்க விழா,மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

விழாவிற்குத்தலைமை தாங்கிய தூத்துக்குடி மாநகரச் செயலாளர், கழகக் கொடியினை ஏற்றி வைத்துச் சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து, தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கியும் தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

இவ்விழாவில் மாவட்ட அவைத்தலைவர் பேச்சிராஜ், மாநில வெளியீட்டு அணிச் செயலாளர் நக்கீரன், மாநகர அவைத்தலைவர் தொம்மை, மாநகரத் துணைச் செயலாளர் முருகேசன், ஒன்றியச் செயலாளர் செந்தூர் பாண்டி நிர்வாகிகள் முருகன், பொய்யாமொழி, ராமகிருஷ்ணன், துரை மகாராஜன் உள்ளிட்ட ஏராளமான கட்சித் தொண்டர்களும் பொதுமக்களும் பங்கேற்றனர்.

## தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை சீரமைத்து, சமூக நீதியை நிலை நாட்டி, மக்களின் ஆட்சியாக இனி வரும் 5 ஆண்டுகள் தமிழகத்தில் ஆட்சி நடைபெற வேண்டும்

### தமிழக வெற்றி கழகத்திற்கு தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை



கோவை பந்தயசாலையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அமைந்துள்ளது. இதன் கோவை மாவட்ட தலைவர் சு. பழனிச்சாமி இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்பொழுது அவர் கூறியதாவது..

தமிழ்நாடு சட்ட மன்றதேர்தல்நிறைவு பெற்று, தமிழக வெற்றி கழகம் வெற்றிபெற்றுள்ளது. இதற்கு தமிழக மக்கள் மாபெரும் ஆதரவை தந்துள்ளனர். வெற்றி பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகளை கூறுவதாக கூறியவர்..

தமிழத்தில் புதிய கட்சி உதயமாகி உள்ளது இந்த கட்சி அறிவித்துள்ள பல்வேறு திட்டங்களை செயல்படுத்தவேண்டும்,வெற்றி பெற்ற பின்னர் இதனை மறந்து விட கூடாது என தெரிவித்தார். இந்த தேர்தலில் பணநாயகம் முற்றிலும் ஒழிக்க பட்டு, ஜனநாயகம் வென்றுள்ளது. 1.72 லட்சம்பேர்பணத்துக்கு விலை போகாமல் வாக்குகளை செலுத்தி உள்ளனர் இது வரவேற்கத்தக்கது. என்று தெரிவித்தார். மேலும் பணத்தை வழங்கி அதிகாரத்தை பெறலாம் என்ற எண்ணங்களுக்கு மக்கள் தீ வைத்து கொளுத்தி உள்ளனர். மக்கள் காமராஜரை போல, கக்கனை போல, வழங்கவேண்டும்,சட்ட ஒழுங்கு பாது காக்க பட வேண்டும், சமூக நீதி நிலை நாற்றபட வேண்டும், நீர் நிலைகளை காக்க வேண்டும், தொழிலாளர் நலன் காக்க பட வேண்டும், தொழில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்,விவசாய நிலங்கள் பெருக வேண்டும்,இதற்க்கு நீர் நிலைகளை காக்க வேண்டும், தமிழகத்தில் காவல்துறை,நீதித்துறை, மருத்துவம், விஞ்ஞானம், அரசின் கடமை அனைத்திலும், ஜாதி மத வேறுபாடுகள் இன்றி நல்ல அரசாக செயல்பட வேண்டும் என்று கேட்டு கொண்டார்.கூட்டணியும்நல்ல கூட்டணியாக ஊழல் இல்லாத வேண்டும் என்று கேட்டு கொண்டார்.. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு, சீர் பட வேண்டும் இத்தகைய செயல்களை தமிழக வெற்றி கழகம், நல்ல அரசை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திமுக அரசு வரக்கூடாது என்பதற்காக மக்கள் வாக்களித்துள்ளார்கள் எங்கள் கூட்டணி தேர்தலுக்கான கூட்டணி மட்டும்தான்; மாணிக்கம் தாகூர் பேட்டி




தமிழக வெற்றிக்கழகத்திற்குபெரும்பான்மை கிடைக்காத நிலையில் காங்கிரஸ் கட்சி ஆதரவளிக்கும் என்று பரவலாக பேசப்பட்டு வருகிறது இந்த விவகாரம் குறித்து டெல்லியில் காங்கிரஸ் கட்சியினர் ஆலோசனை கூட்டம் நடத்தினர்.இது குறித்த முடிவை இன்னும்அறிவிக்காதநிலையில் விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் தற்போது டெல்லி செல்கிறார் டெல்லி செல்வதற்காக மதுரை விமான நிலையம் வந்த மாணிக்தாகூர் எம்பி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அவரிடம் தமிழக வெற்றிக்கழகத்திற்கு பெரும்பான்மை தேவைப்படும் நிலையில் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு நேற்று காங்கிரஸ் நிர்வாகிகள் ஜூம் மீட்டிங்கில் எடுக்கப்பட்ட முடிவை அதற்கான அறிவிப்பை தமிழக தேர்தல் பொறுப்பாளர் கிரீஸ் சோடங்கர் அறிவிப்பு வெளியிடுவார் இந்த தேர்தலை பொருத்தவரை பாஜக தமிழகத்திற்குள் வரக்கூடாது என மக்கள் வாக்களித்துள்ளனர் என்றார்.

தமிழக முதல்வர் மற்றும் காங்கிரஸ் தலைவர் தோல்வி அடைந்தது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு

திமுக முதலமைச்சர் தோல்வி என்பது வருத்தம் அளிக்கிறது.அது நடந்திருக்க கூடாது. அதேபோல காங்கிரஸ் தலைவர் தோல்வியும் நடந்திருக்கக்கூடாது. ராஜீவ் காந்தி உயிரிழந்த இடத்தில் தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கிறது என்றார்.

தொடர்ந்து பேசிய அவர் தமிழக மக்கள் பாஜக ஆட்சிக்கு வரக்கூடாது என்ற நிலையில் வாக்களித்துள்ளார்கள். அதவாத சக்திகள் உள்ளே நுழையக்கூடாது என்பதற்கான தேர்தல்தான் திருப்பரங்குன்றத்தில்அதிமுக மூன்றாவது இடத்திற்கு சென்றது தேர்தல் பிரச்சாரத்தில் திருப்பரங்குன்றம் எம்எல்ஏவாகஇருந்தராஜன் செல்லப்பா தீபம் ஏற்றுவோம் என கூறினார். ஆனால்தேர்தலில்மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

மதவாதத்துடன் விலை போனதால் தோல்வியுற்றார். காங்கிரஸ் கட்சி எங்கள் முதுகில் மட்டுமல்ல தமிழக மக்களின் முதுகிலும் குத்திவிட்டது என திமுக செய்தி தொடர்பாளர் சரவணன் கூறியது குறித்த கேள்விக்கு சரவணன் புலம்பல்.வன்மத்தின் அடிப்படையில் உருவானது. எங்களுடைய நோக்கம் பிஜேபி வரக்கூடாது. இந்த மண் பாஜகவிற்கு ஆர் எஸ் எஸ் க்கு எதிரான மண்ஆனால் சரவணன் போன்றவர்கள் தமிழகத்தில் பிஜேபி வரவேண்டும் என்று நினைக்கிறார்கள்

தமிழக மக்கள் தெளிவாக முடிவெடுத்து ள்ளனர்., ஆட்சியில் பங்கு தமிழகம்ஏற்றுக்கொள்ளாது என சொன்னார்கள், தமிழக மக்கள் தீர்மானித்து விட்டார்கள்.

மக்கள் மத வாதத்தை நிராகரிக்கிறார்கள்.. விஜய் பாஜகவிற்கு எதிராக நின்று வெற்றி பெற்றுள்ளார்.

தனக்கு கிடைக்கவில்லை என்றால் மற்றவர்களுக்கு தட்டிவிடும் பழக்கம் கொண்டவர் திமுக சரவணன் தொடர்ந்து பேசிய மாணிக்தா தாகூர் இந்த சட்டமன்றத் தேர்தல் திமுகவிற்கு அரசுக்கு எதிராகவாக்களித்துள்ளனர் 15 அமைச்சர்கள் தோல்வியடைந்துள்ளனர். நாங்களெல்லாம் அரசாங்கத்தில் இல்லை. கூட்டணியில் இருந்தோம், அரசாங்கத்தில் பங்கேற்கவில்லை. இந்த கூட்டணி 2026 தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட கூட்டணி தேர்தல் முடிந்துவிட்டது..மேலும் இந்த தேர்தலில் மக்கள் அளித்த ஓட்டு அதிமுகவிற்கு எதிரான ஓட்டுக்காக தான் பார்க்கிறோம். தமிழகத்தில் அமிர்தாவும் மோடியும் காலண்டர் நினைத்தாலும் மக்கள் அவர்களுக்கு எதிராக வாக்களித்து பாஜக எண்ணிக்கை குறைத்து ஒன்றாக மாறியுள்ளது என்றார்.

தமிழகத்தின் இரண்டு திராவிட கட்சிகளும் பல ஆண்டுகளுக்குப் பிறகு அகற்றப்பட்டுள்ளது என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு விஜய் பேசும் ஐடியாலஜி. எம்ஜிஆர், கலைஞர் பேசிய அரசியல் தான் பேசுகிறார்..உங்களைப் பொறுத்தவரை இந்த மண் என்பது பாஜக ஆர் எஸ் எஸ் க்கு எதிரான மண் என்பது மட்டும் தெளிவாக உள்ளது என்றார்.

### தவெக தலைவர் விஜய் முதலமைச்சராக பதவி ஏற்று சிறப்பான ஆட்சியை தர வேண்டும்

## விஜயின் பெயரில் சிறப்பு வழிபாடு செய்து கோயிலில் பொங்கல் வைத்து வேண்டுதலில் ஈடுபட்ட தவெக தொழிற்சங்கத்தினர்



தமிழக சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றிதமிழகவெற்றி கழகம் ஆட்சி அமைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது இதனை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தவெக, நிர்வாகிகள் தொண்டர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்

இந்த நிலையில் இன்னும் ஒரு சில நாட்களில் தவெக தலைவர் விஜய் முதலமைச்சராக பதவி ஏற்க உள்ளதை முன்னிட்டு தேனியில் தமிழக வெற்றி கழகத்தினர் கோயிலில் பொங்கல் வைத்து வேண்டுதலில் ஈடுபட்டனர் விஜய் முதலமைச்சராக பதவி ஏற்று தமிழக மக்களுக்கு சிறப்பான ஆட்சியை வழங்க வேண்டும் என தவெக போக்குவரத்து தொழிற்சங்கம் சார்பில் பானையில் பொங்கல் வைத்தனர்

தொடர்ந்து அரசு பேருந்தில் பயணித்த பொதுமக்களுக்கு பொங்கல் வழங்கி தங்களது வேண்டுதலை நிறைவேற்றினர் பின்னர் கோயிலில்தமிழகவெற்றிக்கழக தலைவர் விஜயின் பெயரில் சிறப்பு பூஜைகளை நடத்தி வழிபாடு செய்தனர்

தமிழகவெற்றி கழகத்தின் போக்குவரத்து தொழிற்சங்க நிர்வாகி சிவராமன் தலைமை கைப்பற்ற இந்த நிகழ்ச்சியில் தொழிற்சங்க நிர்வாகிகள் ஆனந்த ராஜா, துரை பாண்டி, சத்தியராஜ்,ராமர்,மாயன்,விக்னேஷ்வரன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்- சிவராமன் (போக்குவரத்து தொழிற்சங்கம்)



தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்று, புதிய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீநாத்தை, காங்கிரஸ் கட்சியினர் நேரில் சந்தித்துத் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர் ஸ்ரீநாத் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் பெருமாள் சாமி கதிர்வேல், அவரை நேரில் சந்தித்து, பொன்னாடை அணிவித்து தனது மனமார்ந்த வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டார். இந்த வாழ்த்து நிகழ்வின் போது, இளைஞர் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் ஜான் பிரிட்டோ மற்றும் காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் கலந்துகொண்டு புதிய சட்டமன்ற உறுப்பினருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# அதிமுக பொதுச்செயலாளரை சந்தித்து வெற்றிச் சான்றிதழை கொடுத்து வாழ்த்து பெற்ற ஓமலூர் தொகுதி அதிமுக எம்.எல்.ஏ.



சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்ற தொகுதி தேர்தலில் வெற்றி பெற்ற அதிமுக வேட்பாளர் R. மணி அவர்கள் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்களை நேரில் சந்தித்து வெற்றிச் சான்றிதழை கொடுத்து வாழ்த்து பெற்றார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 2,67,810 வாக்குகள் உள்ளன. கருப்பூர் பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை 26 சுற்றுகளாக எண்ணப்பட்டது. முதல் சுற்றில் அதிமுக சார்பில் போட்டியிட்ட R.மணி 3863 வாக்குகள் பெற்று தொடர்ந்து முன்னிலை வகித்து வந்தார். 1 சுற்றில் இருந்து 26 வது சுற்று வரை அதிமுக வேட்பாளர் ஆர்.மணி தொடர்ந்து முன்னிலை வகித்து. 1,12,246 வாக்குகள் பெற்று 14,539 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கடந்த முறையும் ஓமலூர் தொகுதியில் R.மணி வெற்றி பெற்றிருந்தார்.

இந்த முறையும் மக்கள் அவருக்கு வாக்களித்து 14,539 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்துள்ளனர்.

# மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின், 33வது ஆண்டு துவக்கவிழாவை முன்னிட்டு கோவை மதிமுக கட்சி அலுவலகத்தில் கழக கொடியேற்றி வைத்து இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் துவங்கபட்டு, 33 ஆம் ஆண்டுகள் கடந்துள்ளது. இதன் தொடக்க விழாவை முன்னிட்டு

கோவை மாநகர் மாவட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக, கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள மாவட்ட, கழக தலைமை அலுவலகத்தில், மாநகர் மாவட்ட செயலாளர் கணபதி செல்வராசு தலைமை தாங்கினார். மதிமுக கழக கொடியினை மாநகர் மாவட்ட அவைத்தலைவர் அ.சேதுபதி ஏற்றி வைத்தார். தொடர்ந்து கட்சி அலுவலகத்தில்அமைந்துள்ள பேறறிஞர் அண்ணா சிலைக்கு மாநில சட்டதுறை செயலாளர்சூரி.நந்தகோபால் மாலை அணிவித்தார்.


மாநகர் மாவட்ட மகளிர் அணி தலைவர் சுஜிதா தர்மராஜ் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.முன்னதாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய மதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் கணபதி செல்வராசு கூறியதாவது..

மதிமுக கட்சி துவங்கி 33 ஆண்டுகள் கடந்து மக்கள் மத்தியில் ஒரு நல்லகட்சியாக உருவாகி உள்ளது. இதற்க்கு காரணம் மதிமுக பொதுசெயலாளர் வைகோ தான், அவரது அயராது உழைப்பின் வெளிப்பாடாக தமிழகத்தில், மதிமுக கட்சி நிலைத்து ஜெயித்திருப்பதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட துணைச்செயலாளர்கள் பயனீர் தியாகு, சு.தூயமணி, சித்ரா தங்கவேலு, பகுதி கழக செயலாளர்கள் எஸ்.பி.வெள்ளியங்கிரி, அன்பு என்கிற தர்மராஜ், எல்.லூயிஸ், கே.பழனிச்சாமி, விஸ்வராஜ், குனிசை லாரன்ஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்

கு.விஜயகுமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் மார்க்கெட் எம்.செல்வம், ராமச்சந்திரன், வி.கே. எம்.ஷாஜகான், பாலசுப்பிரமணியம் மற்றும் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக பொறுப்பாளர்கள் நியமிக்க பட உள்ளனர்



கோவை சிவாஜி காலனியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சி அலுவலகம் செயல்பட்டு வருகின்றது.

இதன் மாநில துணை தலைவராக வழக்கறிஞர் புஸ்பானந்தம் செயல்பட்டு வருகின்றார். இவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது..

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக பொறுப்பாளர்கள் நியமிக்க பட உள்ளனர். மாநகர் மாவட்ட தலைவர், மாநகர் மாவட்ட செயலாளர், மாநகர் மாவட்ட பொருளாளர், மற்றும் மகளீரணி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பதவிகளுக்கு நியமிக்க பட உள்ளனர். தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், அரசியலில் ஈடுபாடும், பொது வாழ்கையில் ஈடுபாடு உள்ள துடிப்புள்ள, ஆர்வமுள்ள நபர்கள் கட்சியில் இணைந்து செயல்படலாம். மகளீர்களு க்கும் பொறுப்புகள் வழங்கபட்ட உள்ளது. கட்சியில் இணைந்து, உங்களது மாவட்டங்களில், கட்சி பொறுப்புகளில் இணைந்து பணியாற்ற விருப்பமுள்ள வர்கள் தமிழக முற்போக்கு மக்கள் கட்சி மாநில துணைத் தலைவர் வழக்கறிஞர் புஸ்பானந்தம்,

99946 84248

97513 89368 என்ற இந்த எண்ணில் தொடர்பு கொள்ளவும் என தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள குள்ளம்பாளையத்தில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையனின் இல்லத்திற்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் அவரது வீட்டின் நுழைவாயில் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. முன்னதாக கோபி தொகுதியில் இந்த முறையில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுச்சேரியில் திமுக, பாஜகவை விட தவெகவுக்கு அதிக வாக்கு சதவீதம்!



புதுச்சேரி: புதுச்சேரியில் திமுக, பாஜகவை விட தவெக அதிகமாக வாக்கு சதவீதம் பெற்றுள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 30 தொகுதிகளில், திமுக 5, பாஜக 4, தவெக 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறது.

தவெகவை விட திமுக, பாஜகவுக்கு பெரிய அளவில் எம்எல்ஏக்கள் எண்ணிக்கை கிடைத்திருப்பதாக தெரியலாம். ஆனால் வாக்கு சதம் இரு கட்சிகளை விட தவெகவுக்கு அதிகம்.

புதுவை சட்டப்பேரவைத் தேர்தலில் 91.23 சதம் வாக்குப் பதிவானது. வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடந்தது. புதுவை சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் பிரதான தேசிய, மாநில அரசியல் கணக்குகளை தலைகீழாக மாற்றி உள்ளது.

முதல் தேர்தலிலேயே, 2 பிரதான கட்சிகளான பாஜக மற்றும் திமுகவை தவெக முந்தியுள்ளது. வழக்கம் போல என்.ஆர். காங்கிரஸ் தனது செல்வாக்கை தக்க வைத்துள்ளது.

16 தொகுதிகளில் போட்டி யிட்டு 1 லட்சத்து 98 ஆயிரத்து 219 ஓட்டுகளை பெற்று, 23.12 சதவீத வாக்குகளுடன் என்ஆர்.காங்கிரஸ் முதலிடத்தை பிடித்துள்ளது.

22 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 492 ஓட்டுகளை பெற்று, 17.5 சதவீதத்துடன் 2-ம் இடத்தை பிடித்து ள்ளது. யாரும் எதிர்பாராத விதமாக, தவெக புதுவை அரசியலில் ஒரு புதிய சக்தியாக உருவெடுத்துள்ளது.

30 தொகுதிகளில் களம் கண்ட தவெக ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 477 வாக்குகளை குவித்து 16.7 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது. இதன் மூலம் 2 எம்எல்ஏக்கள் சட்டப்பேரவைக்குள் நுழைகின்றனர்.

தவெக 3-ம் இடத்தை பிடித்துள்ளது. திமுக 13 தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 36 வாக்குகள் பெற்று 13.7 சதவீதத்துடன் 4-ம் இடத்தையும், 10 தொகுதிகளில் களம் கண்ட பாஜக ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 583 வாக்குகள் பெற்று 12.19 சதவீதத்துடன் 5-ம் இடத்தை பிடித்துள்ளது.

2 தொகுதிகளில் போட்டி யிட்ட அதிமுகவில், உப்பளம் தொகுதியில் அன்பழகனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளது. இக்கட்சி பெற்ற வாக்குச் சதம் 1.09. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இத் தேர்தலில் 0.05 வாக்குச் சதவீதத்தையும், மார்க்சிஸ்ட் கட்சி 0.06 சதத்தையும், நாதக 1.36 சதவீதத்தையும் பெற்றுள்ளன. விசிக 0.14 சதவீத வாக்குகள் பெற்றுள்ளது.

கடந்த 2021 தேர்தலில் என்.ஆர்.காங்கிரஸ் 25.85 சதம் வாக்குகள் பெற்றது. திமுகவுக்கு 18.51 சதம். காங்கிரஸ் கட்சிக்கு 15.71 சதம். பாஜகவுக்கு 13.66 சதம். அதிமுகவுக்கு 4.14 சதம். நாதக 3.37 சதம். விசிகவுக்கு 0.67 சதம்.

கடந்த தேர்தலைக் காட்டிலும் இந்தத் தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ் 2.73 சதம் வாக்குகள் குறைவாகவும், திமுக 4.77 சதம் குறைவாகவும், பாஜக 1.47 சதம் குறைவாகவும், அதிமுக 3.05 சதம் குறைவாகவும், நாதக 2.01 சதம் குறைவாகவும், விசிக 0.53 சதம் குறைவாகவும் பெற்றுள்ளன.




ஈரோடு மாவட்டம் பவானி சாகர் தொகுதியில் தவெக வேட்பாளர் தமிழ்செல்வி பெற்ற வெற்றியை முன்னிட்டு சத்தியமங்கலத்தில் தவெக சார்பில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.ஆதரவாளர்கள் திரளாக கலந்து கொண்டு கேக் வெட்டி மகிழ்ச்சியை பகிர்ந்தனர். பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கப்பட்டன. பின் சத்தியமங்கலம் தவெக சார்பில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற பூவோடு எடுத்தல் திருவிழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது. பக்தர்கள் மேள தாள ஒலியுடன் கலந்து கொண்டு நேர்த்திக்கடன் செலுத்தினர். குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை திரளாக கலந்து கொண்டு உற்சாகமாக வழிபட்டனர். இவ்விழாவையொட்டி சிறப்பு பூஜைகள் நடைபெற்றதுடன், கோவில் வளாகம் முழுவதும் திருவிழா கோலாகலமாக காணப்பட்டது.

# மேற்கு வங்கத்தில் தொடரும் வன்முறை; பாஜக திரிணமூல் தொண்டர்கள் உயிரிழப்பு



கொல்கத்தா: மேற்கு வங்கத்தில் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் பாஜக, திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்கள் தொடர் மோதலில் ஈடுபட்டு வருவதால் மாநிலம் முழுவதும் பதட்டம் நிலவி வருகிறது.

மேற்கு வங்கத்தில் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த மம்தா பானர்ஜியின் திரிணாமூல் காங்கிரஸ் கட்சி படுதோல்வியை சந்தித்தது. மறுபுறம், பாஜக 208 தொகுதிகளில் வென்று ஆட்சியை கைப்பற்றியது.

மேலும், மம்தாவின் டிஎம்சி 80, காங்கிரஸ் 2 தொகுதிகளிலும் வென்றன. இந்நிலையில், தேர்தல் முடிவுக்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, "தான் ஒருபோதும் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய மாட்டேன். பாஜகவும், தேர்தல் ஆணையம் இணைந்து மோசடியில் வென்றுள்ளனர்" என்றும் குற்றச்சாட்டினார்.

இதனிடையே தேர்தல் முடிவு வெளியானது முதல் மேற்கு வங்கம் முழுவதும் தொடர் கலவரம் நிகழ்ந்து வருகிறது. திரிணாமூல் காங்கிரஸ் மற்றும் பாஜக நிர்வாகிகள் மாநிலம் முழுவதும் மோதலில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக நேற்று இருவேறு இடங்களில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களில் இரண்டு கட்சிகளையும் சேர்ந்த தொண்டர்கள் ஒருவர் உயிரிழந்தனர்.

கொல்கத்தாவின் நியூ டவுன் பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற வெற்றி கொண்டாட்டத்தின் போது டிஎம்சி தொண்டர்களால் தாக்கப்பட்டு பாஜகவை சேர்ந்த ஒரு தொண்டரும், டிஎம்சியை சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். வெற்றி கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட வாக்கு வாதத்தில் இந்த கொலை சம்பவம் நடைபெற்றுள்ளதாக போலீசார் விளக்கமளித்துள்ளனர்.

இந்நிலையில், தேர்தல் முடிவுக்குபிறகு மாநிலம் முழுவதும் தங்களின் தொண்டர்களின் மீது பாஜகவினர் தொடர் தாக்குதல் ஈடுபட்டு வருவதாக டிஎம்சி தலைவர்கள் குற்றஞ்சாட்டியு ள்ளனர். இது தொடர்பாக வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள அவர்கள், பாஜகவின் அராஜகத்தை தேர்தல் ஆணையமும், மத்திய அரசும் வேடிக்கை பார்ப்பதாகவும் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.

திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் குற்றச்சாட்டுக்கு அம்மாநில பாஜக தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தோல்வியை தாங்கிக்கொள்ள முடியாமல் பாஜகவின் மீது அபாண்ட குற்றச்சாட்டுக்களை தெரிவிப்பதாகவும், திரிணாமூல் காங்கிரஸ் கட்சி தொண்டர்களே பாஜகவினரைதாக்கிவருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

போலீசார் மீது துப்பாக்கிச்சூடு

இதனிடையே, மேற்கு வங்கத்தின் நஜிம் பகுதியில் நடைபெற்ற மோதலை தடுக்கச்சென்ற காவலர்கள் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில் ஒரு காவலரின் காலில் குண்டு பாய்ந்தது. மற்றொரு காவலரும் படுகாமடைந்தார். இருவரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாநிலம் முழுவதும் இரண்டு கட்சி தொண்டர்களும் ஒருவரை ஒருவர் தாக்கும் வீடியோக்கள் வெளியாகி பதட்டமான சூழ்நிலையை மேற்கு வங்கத்தில் ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையம் கடும் எச்சரிக்கை

மேற்கு வங்கத்தில் இன்னும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் சூழ்நிலையில், வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு தேர்தல் ஆணையம் கடும்எச்சரிக்கைவிடுத்துள்ளது. வன்முறையை தூண்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள மாநில தலைமை செயலாளருக்கு தலைமை தேர்தல் ஆணையம் ஞானேஷ் குமார் உத்தரவிட்டுள்ளார்.

# முதலமைச்சராக பதவியேற்கும் விஜய்; பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து டிஜஜியுடன் ஆலோசனை



சென்னை: தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவி ஏற்கவுள்ள நிலையில், தமக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துடிஐஜிதர்மராஜனுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடந்து முடிந்த நிலையில், மே 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையானது நடைபெற்றது. அதில் திராவிட கட்சிகளைபின்னுக்குத்தள்ளி, தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களை பிடித்திருக்கிறது. ஆனால் ஆட்சியமைக்க, 118இடங்கள் தேவைப்படும் நிலையில், பெரும்பான்மையை நிரூபிக்க சில கட்சிகளிடம் விஜய் ஆதரவு கோரியுள்ளார்.

ஆட்சி அமைப்பதற்காக உரிமை கோரியுள்ள தமிழக வெற்றிக் கழகம், அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தீவிரமாகமேற்கொண்டுவருகிறது. இத்தகைய சூழ்நிலையில்தான் திமுகவுடனான கூட்டணியில் போட்டியிட்டு 5 இடங்களை கைவசம் வைத்துள்ள காங்கிரஸ், தற்போது அக்கட்சியினுடனான கூட்டணியை முறித்துக்கொண்டு தவெகவிற்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் நாடாளுமன்ற தேர்தலிலும் தவெகவுடன் தான் கூட்டணியை தொடர இருப்பதாகவும் அறிவித்திருக்கிறது. இதனைத் தொடர்ந்து மற்ற கட்சிகளிடமும் தவெக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இதனிடையே, தவெக தலைவர் விஜய் நாளை (மே 7) தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்கவுள்ள நிலையில், இன்று மதியம் 3.30 மணியளவில் தமிழ்நாடு பொறுப்பு ஆளுநர் விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமைகோரி கடிதம் அளித்தார். இதற்காக, அவருடைய நீலாங்கரை இல்லத்திலிருந்து பனையூர் அலுவலகத்திற்கு விஜய் புறப்பட்டு சென்றார். ஆளுநரை சந்தித்து கூட்டணிக்கு காங்கிரஸ் கட்சி கையெழுத்திட்ட கோப்புகளை வழங்கினார்.

அதற்கு முன்னதாக நீலாங்கரையில் உள்ள விஜய்யின் இல்லத்தில் டிஐஜி தர்மராஜன், விஜயகுமார் உள்ளிட்ட காவல்துறை உயர் அதிகாரிகள் அவரை சந்தித்து முதலமைச்சர் பதவியேற்பு விழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

விஜய் மற்றும் அவரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான பணிகளுக்கு தற்காலிக பொறுப்பு அதிகாரியாக டிஐஜி தர்மராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வேலூர் சரக டிஐஜியாக நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய்யின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவல் குழுவின் தலைமை பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2 நாட்களாகவே விஜய்யின் பாதுகாப்பு ஏற்பாடுபணிகள் குறித்து இவர்கள் ஆலோசனை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. அவர் செல்லக்கூடிய இடங்கள், அவர் கலந்துகொள்ளும் நிகழ்வுகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை இனிவரும் காலங்களில் இவர்கள் கவனிப்பார்கள் என்று தெரிகிறது.

# திருப்பதி கோயிலில் 2.45 லட்சம் பக்தர்கள் தரிசனம்: ரூ.12 கோடி உண்டியல் காணிக்கை



திருமலை: கோடை விடுமுறை என்பதால் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வழக்கத்திற்கும் அதிகமாக பக்தர்களின் கூட்டம் உள்ளது. அதுவும் கடந்த வெள்ளி (தொழிலாளர் தினம் ), சனி, ஞாயிறு ஆகிய 3 நாட்களும் அரசு விடுமுறை நாட்கள் என்பதால், கூட்டம் மேலும் அதிகரித்தது.

இதனால் கோயிலுக்கு வெளியே சுமார் 5 கி.மீ. தூரம் வரை பக்தர்கள் வரிசையில் தரிசனத்துக்காக காத்திருந் தனர். கோடை காலத்தில் கூட்டம் அதிகரிக்கும் என்பதால் கடந்த மே 1-ம் தேதி முதல் 2 மாதங்களுக்கு விஐபி பிரேக் தரிசன முறையை தேவஸ்தான நிர்வாகத்தினர் முற்றிலுமாக ரத்து செய்தனர். எஸ்எஸ்டி (டோக்கன் உள்ள சர்வ தரிசனம்) 3 மணி நேரத்துக்குள்ளும், ரூ.300 சிறப்பு தரிசனம் இரண்டரை மணிநேரத்துக்குள்ளும் சுவாமியை தரிசித்து விடுகின்றனர்.

தினமும் 65 முதல் 70 ஆயிரம் பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்வர். ஆனால், தற்போது கடந்த 3 நாட்களில் மட்டுமே 2.45 லட்சம் பக்தர்கள் சுவாமியை தரிசித்துள்ளனர். இதனால் கடந்த 3 நாட்களில் மட்டுமே உண்டியல் மூலம் ரூ. 11.95 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது. கடந்த மே 2ம் தேதி அதிகபட்சமாக 91,005 பக்தர்கள் சுவாமியை தரிசித்தனர். மே 3ம் தேதி மட்டுமே உண்டியலில் ரூ.5.06 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


# போதைப் பொருள் தடுப்பு சோதனையில் ஜம்மு காஷ்மீரில் 500 பேர் கைது




ஜம்மு: ஜம்மு-காஷ்மீரில் 'போதைப் பொருள் இல்லாத ஜம்மு-காஷ்மீர் அபியான்' திட்டத்தின் கீழ், போதைப் பொருள் தடுப்புதொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரத்தை துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா கடந்த ஏப்ரல் 11ம் தேதி தொடங்கி வைத்தார். இதன் ஒரு பகுதியாக போதைப் பொருள் தடுப்பு சோதனை நடைபெற்று வருகிறது. இந்த சோதனையின் போது 500-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் காஷ்மீர் மண்டலத்தில் ரூ.12.66 லட்சம் மதிப்பிலான 6 அசையும் சொத்துகளும், ரூ.7.77கோடிமதிப்பிலான 14அசையா சொத்துகளும் முடக்கப்பட்டன.

ஜம்மு மண்டலத்தில் ரூ.1.36 கோடிமதிப்பிலான 22அசையும்சொத்துகளும், ரூ.5.54 கோடிமதிப்பிலான 9 அசையா சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும்,537 கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 502 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# Kyle Rittenhouse says 'felons deserve the right to own guns'; sparks debate



*Kyle Rittenhouse has sparked a debate with a post on X, where he suggested that felons should be given the right to own guns if they serve their time.*

*Kyle Rittenhouse has sparked a debate with a post on X, where he suggested that felons should be given the right to own guns if they serve their time. Rittenhouse was accused of fatally shooting two people during an unrest in Kenosha, Wisconsin, in August 2020.*

*A US jury found him not guilty of reckless and intentional homicide and other charges in 2021. Rittenhouse claimed that he acted in self-defense on the night of the shootings.*

*"Felons deserve the right to own guns if they serve their time. Once they've completed their sentence, they should be restored all their rights. I understand the argument against violent felons," Rittenhouse wrote on X.*

*He added, "We need to focus on rehabilitation or impose appropriate harsh sentences. If someone is too dangerous to own a gun, they should be incarcerated or placed in an asylum."*

*Kyle Rittenhouse's post sparks debate*

*Rittenhouse's post sparked a debate in the comment section. "This would be great, but we first need to fix the soft-on-crime judge and prosecutor problem that plagues this country. Otherwise it would become a disaster," one user commented. "As an LEO I agree for the most part. That said, sentencing penalties even in conservative states and regions are typically very light. Absurdly light. People never do the prescribed time for the crime, and its a small number of clowns doing most of the circus acts. Unreformable," wrote another. One said, "Still depends though. If you have a habit of stealing newspapers and getting caught, I don't think you're the worst person to own a gun. But someone like Joseph Rosenbaum? Fu** no".*

*"If they are not capable of owning a gun, they should not be on the streets. I agree with once they get out they should have rights restored(maybe there is a "cooling off/probation period as part of said sentence) But it should not be a lifetime ban," wrote a user, while another said, "Not sure I agree, but seems like a reasonable take. Longer sentences is indeed needed." "What's the point? If they want a gun a law or restrictions is not going to stop them from getting one. Second most end up reoffending because there's no real system to re-assimilate back into society. Fix the recidivism rate and crime will start to go down," one commented.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.